காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2013

TVK

www.tnschools.co.in

பதிவு எண் [ ][ ][ ][ ][ ][ ]

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி

**தமிழ் இரண்டாம் தாள்**

மதிப்பெண்கள்: 80

**அறிவுரை:** 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : **விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

**I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் மிகாது விடை எழுதுக:** **3×4=12**

1) செந்தமிழ்நாடு, கொடுந்தமிழ்நாடு என்ற பிரிவுகள் பற்றிப் பரிதிமாற் கலைஞர் உரைப்பன யாவை?

2) நாடகத் தமிழின் சிறப்பியல்புகளாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை?

3) உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க. கூறுவன யாவை?

4) நமது நாட்டில் நீண்டகாலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு.வி.க. வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.

5) கீட்ஸ், ஜான்ரஸ்கின், பவணந்தி முனிவர் ஆகியோர் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை?

**II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் மிகாது விடை எழுதுக:** **3×4=12**

6) கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கம்பர் உரைக்குமாறு யாங்ஙனம்?

7) பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழுதுக.

8) ஈகைப்பண்பில் தமிழ் மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்குக.

9) மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை?

10) அறுமுறை வாழ்த்து - விளக்குக.

**III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் இருபது வரிகளில் மிகாது விடை தருக:** **1×6=6**

11) கவிதை இன்னது என்று பேராசிரியர் எஸ். வையாபுரியார் வரையறுக்க முயலும் நான்கு கருத்துகளையும் கட்டுரை வடிவில் தருக.

12) தமிழ் - உயர்தனிச் செம்மொழி - இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

**IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக:** **2×10=20**

13) ''பால்வண்ணம் பிள்ளை'' **அல்லது** ''சட்டை'' என்னும் சிறுகதையைக் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

**(அல்லது)**

''வேலி'' **அல்லது** ''மகள்'' என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14) **''கிழிசல்'' அல்லது** ''உல்லாசப் பயணம்'' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

**(அல்லது)**

நீவிர் விரும்பிய சுற்றுலாவிற்குச் செல்ல முடியாது தடையேற்பட்டு அதனால் வருத்தம் எய்தியதாக ஒரு நிகழ்வைப் புனைந்து இருபக்க அளவில் ஒரு கட்டுரை வரைக.

**V.** **பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக்கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக: 1×10=10**

15) ஏந்திர வித்தைகள் வேணது கற்றோம்
என்னென்ன மோபல புதுமைகள் பெற்றோம்
சந்திரன் செவ்வாய் மண்டலத்தோடும்
சங்கதி பேசும் வழிகளைத் தேடும்
அந்தமில் லாபல சக்திகள் கற்றும்
அடிதடி சண்டையை விட்டிட மட்டும்
தந்திரம் ஒன்றும் படித்திலம் ஐயோ
தரணியில் மக்கள் தவிப்பது பொய்யோ?
- நாமக்கல் கவிஞர்

**VI.** **பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக: 3×2=6**

16) Well begin is half done.
17) Familiarity breeds contempt.
18) One flower makes no garland.
19) Every tide has its ebb.
20) Penny wise pound foolish.

**VII.** **பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக: 1×4=4**

21) அ) தன் கையே தனக்கு உதவி
ஆ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
இ) காக்கைக்குத் தன் குஞ்சும் பொன்குஞ்சு **(அல்லது)**
''இயற்கை'' **அல்லது** ''மழை'' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

**VIII.** **பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக: 10×1=10**

22) இந்த செஞ்சுரி ''டென்ஷன்'' நிறைந்தது.
***(பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக)***
23) செல்வனுக்கும் கிள்ளைக்கும் தலா ஐந்து புஸ்தகம் கொடு.
***(பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக)***
24) டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்.
***(ஆங்கிலச் சொற்களை நீக்கி தமிழ்ச் சொற்களைத் தருக)***
25) அந்த சிறுவன் எந்த பள்ளியில் படித்து சிறந்தான்.
***(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)***
26) விழாவல் பல அறிஞர்கள் பேசினர்.
***(வாக்கியப் பிழையைத் திருத்துக)***
27) வெடியங்காட்டியும் வெத்திலை போடறது ஒரு பளக்கமா
***(வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக)***
28) நீரோச் சோறோ எதுக் கிடைத்தாலும் உண்டுச் செல்வேன்.
***(தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்குக)***
29) ''ஒளி'' ''ஒழி'' **அல்லது** ''மலை'' ''மழை''
***(சொற்களின் பொருள் வேறுபாட்டை அறிந்து வாக்கியங்களில் அமைக்க)***
30) காகம் கத்தியது; கழுதை குரைத்தது; சிங்கம் உறுமியது
***(மரபு வழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக)***
31) கீட்ஸ் என்ற கவிஞர் கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளிமழையே கவிதை என்றார்
***(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக)***

-✿-✿-✿-